தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

**<u>சுற்றறிக்கை – 16</u>** **<u>26-10-2016</u>**

அன்புடையீர்,

26-08-2016-ல் தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு அவர்களுக்கு பகுதிநேரஊழியர்களின் பிரச்சனைகள் குறித்து, 3.7.2016 அன்று பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானஎண் 14-ன்படி,30-09-2016-க்குள் நடவடிக்கை எடுக்கவும், தவறும்பட்சத்தில், அக்டோபர் திங்களில் தொழில் தகராறு எழுப்ப நேரிடும் எனத் தெரிவித்து, நமது சங்கத்தின் சார்பில் கடிதம் கொடுத்தோம்.

அக்டோபர் திங்கள் முதல் வாரத்தில் தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு மற்றும் அலுவலர்கள் அடங்கிய குழு, நமது சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி, நமது கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் எனக் கூறினார்கள். அதன்படி முதற்கட்டமாக க.எண்.001046/3/ஜி.56/ஜி.562-2013-1 நாள். 18.10.2016 வாயிலாக, அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுக்கு, பகுதி நேர ஊழியர்கள் குறித்த விவரங்கள் கோரப்பட்டுள்ளது.

கேட்டுள்ள விவரங்களை அந்தந்த வட்டங்களிலிருந்து தலைமைப்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும், அதன் நகலினைப் பெற்று மத்திய சங்கத்திற்கு அனுப்பி வைக்கவும் வேண்டுகிறோம். தங்களிடமிருந்து பெறப்படும் விவரங்களை வைத்துதான் சங்கம் மேல்நடவடிக்கை எடுக்க இயலும். <u>போனஸ் நன்கொடை</u> மத்திய சங்கப் பங்குத் தொகையினை அனைத்துக் கிளைகளும் <u>10.11.2016-க்குள்</u> தவறாமல் <u>அனுப்பி வைத்திட</u> ஆவண செய்திடுமாறு <u>வேண்டுகிறோம்.</u>

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

குறிப்பு :

1) 3.7.2016 பொதுக்குழு தீர்மானம் 14-ன் நகல்.(ஆகஸ்ட் 2016 செய்திமடல் பக்கம்15,16 )
2) 26-08-2016 நாளிட்ட தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு அவர்களுக்கு அளித்த கடித நகல். ( செப்டம்பர் 2016 செய்தி மடல் பக்கம் 21, 22)

இணைப்பு :

1) தலைமைப்பொறியாளர்/பணியமைப்பு அவர்களின் 18-10-2016-ன் கடித நகல்.

பெறுநர்.
வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.

பெறுநர் 26-08-2016

தலைமைப் பொறியாளர் /பணியமைப்பு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

ஐயா

பொருள் தொழிற்சங்கம் - மாநிலப்பொதுக்குழுவில் பகுதிநேர ஊழியர்கள் பிரச்சனைகள் குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மேல்நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கப் படுகிறது

பார்வை 03-07-2016 அன்று நடைபெற்ற சங்கத்தின் மாநிலப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண் -14.

தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரிந்து வரும் பகுதிநேரத்துப்புறவுத் தொழிலாளர்களின் பிரச்சனைகள் தொடர்பாக 3-7-2016 அன்று நடைபெற்ற எங்கள் சங்கத்தின் 62-வது மாநிலப் பொதுக்குழுவின் தீர்மானம் எண் -14-னை இத்துடன் இணைத்துள்ளோம்.

தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது போல

1. வாரிய உத்திரவு 11 நாள் - 02-08-2011-ன்படி வாரியத்தில் பணிபுரியும் அனைத்து பகுதி நேர துப்புறவு பணியாளர்களுக்கும் எந்தவித பேதமும் பாரபட்சமும் இன்றி காலமுறை ஊதியம் வழங்கிடவும்,
2. வாரிய உத்திரவு 02 நாள் - 23-01-2014-ன்படி அனைத்து பகுதி நேர துப்புறவு பணியாளர்களுக்கும் 01-12-2011 முதல் புதிய ஊதிய உயர்வு வழங்கி நிர்ணயம் செய்திடவும்,
3. 15-10-2005-க்கு பின் பணியில் சேர்ந்தவர்கள் என பகுதிநேர துப்புறவு பணியினை செய்ய அனுமதி வழங்கிடாத பகுதி நேர துப்புறவு பணியாளர்களுக்கு அனுமதி வழங்கிடவும்,
4. புதிதாக துவங்கப்பட்ட அலுவலகங்கள் மற்றும் துணை மின் நிலையங்களுக்கும் இறந்துவிட்ட மற்றும் பணி ஓய்வு மற்றும் பணியில் இருந்து நின்றுவிட்ட பகுதி நேர துப்புறவு பணியாளர்களின் காலியிடங்களுக்கு உடனடியாக புதிய பகுதி நேர துப்புறவு பணியாளர்களை அமர்த்திடவும்,
5. தமிழக அரசின் சத்துணவு ஊழியர்களுக்கு வழங்கி வரும் கீழ்கண்ட பலன்களை
   (அ) வைப்பு நிதி பிடித்தம்.
   (ஆ) நிர்ணயிக்கப்பட்ட வீட்டுவாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி
   (இ) மருத்துவப்படி
   (ஈ) சலவைப்படி
   (உ) பணிகால இறுதிப்பலன்கள் மற்றும் சிறப்பு வைப்புநிதி.
   (ஊ) தொகுப்பு ஓய்வூதியம்
   (எ) பணிக்காலத்தில் இறந்தவிடும் பகுதி நேர துப்புறவு பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமித்திடவும்.
   வேண்டுகிறோம்.

சமுதாயத்தின் கீழ்தட்டில் வாழ்க்கை நடத்திவரும் இந்த அடிப்படை ஊழியர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஏற்கனவே எங்களது சங்கத்தின் 7-9-2015 நாளிட்ட கடிதம் மூலம் தங்களுக்கு முறையீடு செய்துள்ளோம். ஆனால் இதுவரை சங்கத்துடன் பேசிடவோ பிரச்சனைகளுக்கு சுமுகத் தீர்வு காணவோ நிர்வாகம் முன்வரவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே இது குறித்து எங்கள் சங்கத்தின் சார்பில் ஒரு தொழிற்தகராறு எழுப்பிட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தொழிற்தகராறு சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு முன் நேரிடைப் பேச்சு வார்த்தை மூலம் இப்பிரச்சனைக்கு தீர்வு காண நாங்கள் விரும்புகிறோம். எனவே இப்பிரச்சனை குறித்து 30-9-2016-க்குள் பேசிட ஏற்பாடு செய்திடுமாறு வேண்டுகிறோம். தவறும் பட்சத்தில் இப்பிரச்சனையில் நாங்கள் அக்டோபர் திங்களில்தொழிற்தகராறு எழுப்ப நேரிடும்என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இணைப்பு ்.தீர்மானம் எண் 14

தங்கள் உண்மையுள்ள,

பொதுச்செயலாளர்

## தீர்மானம் - 14

மின்வாரியத்தில் பல்வேறு அலுவலகங்களிலும் துணைமின் நிலையங்களிலும் கூட்டி பெருக்கி சுத்தம் செய்து குடிதண்ணீர் கொண்டு வைக்கும் பணிகளையும் அங்குள்ள பழிவறைகளை சுத்தம் செய்யும் பணிகளையும் ஆற்றி வருபவர்கள் பகுதி நேர துப்புறவு பணியாளர்கள் ஆவார்கள். இவர்களுக்கு தமிழக அரசின் சத்துணவு ஊழியர்களுக்கு நிகரான ஊதியங்களை வழங்குவது என்ற மின்சாரவாரிய கொள்கை முடிவின்படியும் உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி 04-04-2003 முதல் இவர்களுக்கு வாரிய உத்திரவு (Per) (F.B) TANGEDCO Proceedings No.11, (Adm.Branch) dated 02-08-2011-ன் படியும் முதல் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு காலமுறை ஊதியம் வழங்குவதால் ஒருவருக்கொருவர் இடையில் பாரபட்சமான முறையும் சத்துணவு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு இதரபலன்களை இங்கு பணிபுரியும் பகுதி நேர துப்புறவு பணியாளர்களுக்கு வழங்கப்படாத நிலையும் இருந்து வருவதால் மேற்கண்ட பலன்களை இவர்களுக்கும் வழங்கிட சங்கம் தொடர்ந்து மின்சார வாரியத்திற்கு கோரிக்கைகளை வைத்து வற்புறத்தி வருவதுடன் இதுகுறித்து சங்கத்தின் மாநிலச்செயற்குழுவில் தீர்மானங்கள் நிறைவேற்றி வாரிய நிர்வாகத்தின் கவனத்துக்கு எடுத்து சென்று பேச்சு வார்த்தை நடத்தி இந்த பிரச்சனைகள் மீது தீர்வுகாண வாரிய நிர்வாகத்திற்கு வேண்டுகோளும் வைக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் வாரிய நிர்வாகம் இவைகளின் மீது எந்த ஒரு சுமகமான தீர்வும் காண முன்வரவில்லை. எனவே பாதிப்புக்குட்பட்ட பகுதிநேர துப்புறவாளர்கள் குறித்த கீழ்கண்ட பிரச்சனைகள் குறித்து

1. வாரிய உத்திரவு 11 நாள் - 02-08-2011-ன்படி வாரியத்தில் பணிபுரியும் அனைத்து பகுதி நேர துப்புறவு பணியாளர்களுக்கும் எந்தவித பேதமும் பாரபட்சமும் இன்றி காலமுறை ஊதியம் வழங்குதல்.
2. வாரிய உத்திரவு 02 நாள் - 23-01-2014-ன்படி அனைத்து பகுதி நேர துப்புறவு பணியாளர்களுக்கும் 01-12-2011 முதல் புதிய ஊதிய உயர்வு வழங்கி நிர்ணயம் செய்தல்.
3. 15-10-2005-க்கு பின் பணியில் சேர்ந்தவர்கள் என பகுதிநேர துப்புறவு பணியினை செய்ய அனுமதி வழங்கிடாத பகுதி நேர துப்புறவு பணியாளர்களுக்கு அனுமதி வழங்குதல்.
4. புதிதாக துவங்கப்பட்ட அலுவலகங்கள் மற்றும் துணை மின் நிலையங்களுக்கும் இறந்துவிட்ட மற்றும் பணி ஓய்வு மற்றும் பணியில் இருந்து நின்றுவிட்ட பகுதி நேர துப்புறவு பணியாளர்களின் காலி யிடங்களுக்கு உடனடியாக புதிய பகுதி நேர துப்புறவு பணியாளர்களை அமர்த்துதல்
5. தமிழக அரசின் சத்துணவு ஊழியர்களுக்கு வழங்கி வரும் கீழ்கண்ட பலன்களை
   - (அ) வைப்பு நிதி பிடித்தம்.
   - (ஆ) நிர்ணயிக்கப்பட்ட வீட்டுவாடகைப்படி மற்றும் நார ஈட்டுப்படி
   - (இ) மருத்துவப்படி
   - (ஈ) சலவைப்படி
   - (உ) பணிகால இறுதிப்பலன்கள் மற்றும் சிறப்பு வைப்புநிதி.
   - (ஊ) தொகுப்பு ஓய்வூதியம்
   - (எ) பணிக்காலத்தில் இறந்தவிடும் பகுதி நேர துப்புறவு பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம்.

இந்திய தொழில் தகராறு சட்டம் 1947 2(K)-ன்படி தொழில் தகராறு ஒன்றினை எழுப்பி சமரச பேச்சு வார்த்தைகளின் மூலம் மேற்கண்ட கோரிக்கைகளின் மீது சுமுகமான தீர்வினை கண்டிட இம்மாநிலப்பொதுக்குழு ஒருமனதாக தீர்மானிக்கின்றது.

இந்திய தொழில் தகராறினை எழுப்பிடவும் சமரச பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டு தீர்வு காணவும் திரு.R.சந்திரசேகரன் பொதுச்செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்குவது எனவும் இந்த இம்மாநிலப்பொதுக்குழு ஒருமனதாக தீர்மானிக்கின்றது.

| | |
|---|---|
| A.அய்யாசாமி | R.சுரேஷ் |
| வட்டச்செயலாளர் | வட்டத்தலைவர் |
| கோவை – தெற்கு | கோவை – வடக்கு |
| முன்மொழிதல் | வழிமொழிதல் |

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிட்.**
**நிர்வாகக் கிளை**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| பொறி. அ.வெ.ரவி, M.E., M.I.E., | அனைத்து தலைமைப் |
| தலைமைப் | பொறியாளர் மற்றும் |
| பொறியாளர்/பணியமைப்பு | மேற்பார்வை பொறியாளர். |
| 144, அண்ணா சாலை, | |
| சென்னை — 600 002. | |

கடித எண். 001046/3/ஜி.56/ஜி.562/2013-1, நாள். 18.10.2016.

---

ஐயா,

பொருள்: நிர்வாகம் - ஆள்சேர்ப்பு - புதிய பகுதிநேர துப்புரவு பணியாளர் - (Part time contingent worker)பெருக்குதல்/ கழிவறை சுத்தம் செய்தல்/ கருத்துரு கோருதல் - தொடர்பாக.

பார்வை: 1) TANGECO Proceeding No.11, (Adm.Branch) dt. 02.08.2011.
2) இவ்வலுவலக கடித எண். 001046/3/ஜி.56/ ஜி.562/2013-1, நாள் 15.03.2013.

------

பார்வை (2)-ல் கண்ட இவ்வலுவலக கடிதத்தில் இணைக்கப்பட்ட இணைப்பு-1ல் மாத தொகுப்பூதியம் மற்றும் காலமுறை ஊதியம் விபரங்கள் இடம் பெறாத காரணத்தினால் தற்போது இணைக்கப்பட்ட இணைப்பு 1-ல் குறிப்பிடப்பட்ட பத்திகளின் சரியான விபரங்களை பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு 31.10.2016-க்குள் உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2) மேலும், அவ்வாறு கிடைக்க பெறாமல், காலம் கடந்து கிடைக்க பெறும் விபரங்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது. மேலும் மேற்குறிப்பிட்ட காலதாமதத்திற்கு சம்மந்தப்பட்ட வட்டத்தின் அதிகாரிகளே பொறுப்புடையவர் ஆவார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்பு -1 தாள்.

Sd./-xxxx
(ச. குமார்)
பணித்தொகுதி அலுவலர்/ஆள்சேர்ப்பு
தலைமை பொறியாளர்/பணியமைப்புக்காக

## இணைப்பு - I

கடித எண். 001045/3/ஜி.56/ஜி.562/2013-1, நாள் 18.10.2016.

| வ. எண் | மின் பகிர்மான வட்டம் --------- உற்பத்தி வட்டம் | புதியதாக துவங்கப் பட்ட அலுவலகம் துணை மின் நிலையம் ------------ துவங்கப் பட்ட வருடம் | அலுவலகத்தின் நில பரப்பு (சதுர அடியில்) | துலைமையக ஒப்புதல் பெறாமல் பயன்படுத்தப் பட்டு வருகின்ற துப்புரவு பணியாளர்கள் --------------- பெயர்/ பிறந்த தேதி | பணிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதி ------------ 480 நாட்கள் முடிவடைந்த தேதி விவரங்கள் பணியாளர் வாரியாக அளிக்கவும் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |

| காலமுறை ஊதியம் பெறும் ப.நே.து பணியாளர்கள் பயன்படுத்தப்படுகி றார்களா ஆம் (அல்லது) இல்லை ---------------- ஆம் என்றால் எண்ணிக்கை குறிப்பிடவும் | ப.நே.து. பணியாளர்களின் தொகுப்பூதியம் தொகை பெற்றவர்களின் பெயர், எந்த தேதியிலிருந்து வழங்கப்படுகிறது/ எவ்வளவு வழங்கப்படுகிறது ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல் | ப.நே.து பணியாளர்களின் காலமுறை ஊதியம் பெற்றிவர்களின் பெயர் எந்த தேதியிலிருந்து வழங்கப்படுகிறது ஆகிய விவரம் அடங்கிய பட்டியல் | புதிய அலுவகத்துக்கு தேவைப்படும் ப.நே.து பணியாளர்கள் பெருக்குபவர்/ கழிவறை சுத்தம் செய்பவர் எண்ணிக்கை யில் குறிப்பிடவும் |
|---|---|---|---|
| (7) | (8) | (9) | (10) |

| கருத்துரை |
|---|
| (11) |